





ஓலை 147| ஓசை 270| நவம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



மயிலை சிவ.முத்து

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

பிறந்த, புகுந்த குடும்பங்களுக்கு ஏற்ற நல்ல குணம், நல்ல செயல்களை உடையவளாய்த், தன்னை மணந்தவனின் வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கையை அமைப்பவளே மனைவி.


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa  www.aagaramuthala.com  aagaramuthala@gmail.com

**மருந்தே யாயினும் விருந்தோ டுண்!** பாவகை : நிலைமண்டில ஆசிரியப்பா

மழையாம் அமுதினை வானம் விருந்தாய்
விழைந்து மண்ணுயிர்க் களித்தே ஈந்திடும்;
பிழையாய் மாந்தர் பிழைக்க யெண்ணி
பெரிதும் பதுக்கிப் பேணிட முயல்வதோ?
ஒளியாம் அமுதை நிலவும் கதிரும்
வழியாய் வையம் முழுவதும் ஈந்திட
உளியாய் பிறரை உடைத்துத் தன்னல
உயர்திணை மாந்தர் ஈயா துண்பரே!
தன்னல நோக்குடன் தானே உண்டும்
இன்னு மெத்தனை காலம் வாழ்வர்?
அமுதே எனினும் பிறருக் கீந்தால்,
கமுகாய் வளர்ந்தே காண்பர் வளமே!
காக்கையைப் போலக் கைப்பொரு ளெனினும்
நோக்கம் பெரியதாய் நோக்கியே பகிர்ந்து
வேட்கைக் கொண்டோர் வெற்றி மாந்தர்;
காட்டு விலங்காய்க் கடிப்போர் தீயரே!
முன்னோர் வள்ளல் முனைந்து காட்டிய
நன்மை வழியில் நஞ்சே எனினும்
இணைந்தே நட்புடன் இன்புற் றுண்ணல்
இணையே இல்லா இனிய விருந்தே!







**இலக்கணக் குறிப்பு:**

நான்கு வகை பாக்களில் அகவலென்னும் ஆசிரியப் பா ஒரு வகை. இதில் இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, நேரிசை ஆசிரியப்பா, அடிமறி மண்டல ஆசிரியப்பா என்பவையுண்டு, மேலே உள்ள பாடல் நிலைமண்டில ஆசிரியப்பா நான்கு நான்கு சீர்களாக அளவடியாக இரண்டிரண்டு அடிகளுக்கு ஒரெதுகையும், அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் பொழிப்பு மோனையும் அமைந்து ஒவ்வொரு பாடலும் ன், ஏ, ஓ, ஈ, ஆய், ஐ ஆகிய எழுத்துக்களில் ஈற்றசையில் முடியும். எல்லாச் சீர்களும் ஈரசைச் சீர்களாகவே வரும். காய்சீரும் விரவி வரலாம்.

**நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்**

பாவகை : பஃறொடை வெண்பா

இயற்கை அன்னை இன்பம் ஊட்டவே
இயல்பாய் வாழவே இடத்தை நல்கவே
கயத்தில் நீருடன் கனியுமே ஈந்திடப்
பயத்தைப் போக்கியே பரிவுடன் உணவுமே
தயக்கம் இன்றியே தருவோர் வள்ளலாம்
செயற்கை தன்னைச் சேர்க்கச் சிற்றுயிர்
செயலினை இழக்கும் செஞ்சமும் அழியுமே
நயத்தைத் தொலைத்திட நலியும் சிற்றுயிர்
வயலில் தங்கியே வளமுடன் பெருகவே
அயத்தைக் காப்போம் அன்பாய் நாளுமே.



கவிஞர் செ. கலைவாணி

ஆசை என்ற ஒற்றை அமிலம்
அழிவை நோக்கி அணுவும் செலுத்தும்
பூசை செய்யும் பொறாமை குணமும்
புதைக்க நினைக்கும் புல்லாய் மிதிக்கும்
மீசை முறுக்கி வீரம் காட்டி
மீளா செருக்கில் மூழ்கி திளைக்கும்
காசை நினைத்தே காலம் செலுத்தி
காற்றைக் கூட ஆள நினைக்கும்

அமைதி அதனை எங்கும் விதைத்தால்
அகிலம் சிறக்கும் அழிவும் ஒழியும்
அமைதி போற்ற அன்பும் செழிக்கும்
அன்பால் அமைதி ஆக்கம் கொடுக்கும்
சமைப்போம் அமைதி சாடல் இன்றி
சான்றாய் புறாக்கள் தூதும் அனுப்பி
இமைப்போல் அரணாய் இருந்தால் அமைதி
இடரும் வருமோ எதிரி நிறுத்தி



கவிஞர் பூர்ணிமா சங்கர்

நிலம்
பரந்து விரிகிறது
வெடிப்பு

மழை
ஓய்ந்து விட்டது
கூட்டம்

காற்று
மீண்டும் அசைகிறது
உதிர்ந்த இலை



வானம்
பச்சை நிறமாகிறது
குழந்தை ஓவியம்

வெயில்
தொடர்ந்து வருகிறது
நிழல்


கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

மௌனத்தை மென்மை என்பார் சிலர்
மௌனத்தை அமைதி என்பார் சிலர்

மௌனத்தை கனம் என்பவர் சிலர்
மௌனத்தை திமிர் என்பவர் சிலர்

நானோ அதைத் தீ என்பேன்
அதில் என்னை உருக்கி எடுப்பேன்

நானோ அதைப் போர்வாளென்பேன்
தீயில் செம்பா எடுத்து
ஜனித்தெழும் பேராயுதமாயென் மௌனம்



பேராயுதம் போர் புரியாமலே
வெற்றி கொள்ளும்
புரவிகள் பூட்டிச் சிறகுகள் வளர்க்கும்

சிறகுகள் கொண்டு விடுதலை காணும்
இரும்புடைத்துப் பறத்தலின் கணத்தில்
வானமென் வசப்படும்!

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# மரணத்தின் பக்கம்



உயிரிருப்பின்
கர்வத்துடன்
இருக்கிறாய்.

உனக்கும்
எனக்குமான
மெல்லிய உயிர்
இலக்கில்லாத காற்றில்.

உணரமுடியாதது
பிரிதொரு
உயிரின் வலியில்
உன் உயிரின் வலியை.

அவரவர்க்கு
சம்பவிக்கும் தருணத்தில்
அறியும் பொருட்டு
சுதந்திரமாய்
அதன் போக்கில்.

கண் சிமிட்டும்
கணம் தான்.
பிடித்து விடுகிறது
சவத்தின் நிலையை
உடல்.

நமக்கான
மரணத்தின் பக்கம்
என்றும்,
மறைக்கப்பட்டதாகவே!

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# மகளெனும் தேவதை

வானத்து தேவதையாய் மகளும் பிறந்தாள் ;
வாழ்வினிலே கொஞ்சிவரும் ஊற்றாய் ஆனாள் !

தேனென்னும் குரலெடுத்து அப்பா என்றாள் ;
சிரித்திட்ட முகம்தன்னில் தாயாய் மலர்ந்தாள் !

நாணம்சேர் கற்புநெறி காத்து நடந்தாள் ;
நல்லறத்தால் இல்வாழ்வில் மாட்சி கொண்டாள் !

நலிவுற்றால் ஓடோடி வருவாள் துடிப்பாள் ;
நயம்பட்ட சொற்களிலே அன்னை ஆவாள் !

அண்ணன்தம்பி சீர்உறவில் விட்டுக் கொடுப்பாள் ;
அக்கறையாம் உள்ளத்தே பகைமை மறப்பாள் !

இல்லமிருந்தும் மகன்கள் பிரிவைத் தருவார் ;
பிரிந்தபோதும் இறுதிவரை மகளே உறவாம் !



கவிஞர் ஆ சீ கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# வியாபாரம் நிறைந்த உலகம்



செய்யும் தொழிலே தெய்வம்
என்பது ஆராய்ந்தறிந்த உண்மை கூற்று
அதில் எதற்கு கலங்கம் புகுத்துகிறாய்
எல்லோரும் எல்லா நேரத்திலும்
ஒரே மாதிரி இருப்பதில்லை
பணத்திற்காக எந்த எல்லையும்
அடைய தயங்க மாட்டார்கள்
படிப்பு என்பது ஒரு
தனி மனிதனின் அடையாளம்
அதை எல்லாம் வியாபாரமாய்
மாற்றி பணத்தை கொள்ளையடிகிறார்களே
ஏழைகளின் வயிற்றில் அடித்து
எல்லாத்தையும் விற்பனை உலகமாக மாற்றுகிறார்களே
காலங்கள் நகர நகர வியாபாரம் நிறைந்த
உலகமாய் மாறி விட போகிறதே
இதெல்லாம் இந்த அண்டத்திற்கு அழகல்ல!

கவிஞர் மோனிஷா


# காளிகாம்பாள்

காளிகாம்பாள் சக்தியின் மறுவடிவம்
காளிகாம்பாள் கடலோரம்
கடல் அலை ஓசையில் காதிற்கு
இனிமையாக கேட்டு ரசிப்பவள்.
காளிகாம்பாள் அம்மனுக்கு
செந்தூரம் சாத்தி வழிபடும்போது
நினைத்த காரியத்தை நிறைவேற்றி தருபவள்
கை மேல் பலன் தருபவள்
காளியின் சக்தி உக்கிர ரூபம் கொண்டவள்
தீயவைகளை அழித்து
நன்மைகளை வாரி வழங்குபவள்
அவளை தேடி வருபவர்களுக்கு
எண்ணிய எண்ணங்களை நினைத்தபடி
நிறைவேற்றி தருபவள்
காளிகாம்பாள் கண் கண்ட சக்தி
கருணையின் அரசியாக வீரமாக வீற்றிருக்கிறாள்
கடை கண்களால்
இவ்வுலகத்தை இயக்கி வருகிறாள்.
துக்கங்களை தகர்த்தெறிந்து
சுகங்களை வழங்கி கொண்டிருக்கிறாள்.



கவிஞர் மா. நந்தினி, சேலம்

மறதி பிணி மக்களை அறுக்க
முறை யிழந்தவன் பிதற்றல்
காற்றில் கரைந்துப் போனது
அரசியல் பிழையால்
அந்தியில் அல்லற்படும் வறியோர்.



ஓர்மை கனவை நறுக்கும் பிழை
ஒறுத்தல் இல்லாமல் போனதால்
ஒவ்வாமை உருவகம் ஒற்றிட
உருக்குலைந்த கட்டமைப்பு.
பிழையால் பிழைக்கும் திரள்
பிழை திருத்திக்கொள்ளுமா?
தமிழினம்.

கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# அன்புக்கு அவளென்று பேர்

அன்பான என்னவளே
அழகான வடிவழகே

ஆசைகள் துளிர்த்திட
ஆனந்தம் இதயத்திலே

இதழ்களின் புன்னகையில்
இனிமையானது இளமையே

ஈர்ப்பானப் பார்வைதனில்
ஈரமானது நெஞ்சமே

உள்ளத்தின் துடிப்பாகி
உணர்வினில் கலந்திட்டாயே

ஊடலது ஏதுமின்றி
ஊஞ்சலில் ஆடுகிறேனே

எண்ணத்தில் நிறைந்து
எனக்குள் வாழ்கிறாயே

ஏகாந்தம் என்றுமில்லை
ஏந்திழை நீயிருக்கையிலே

ஐக்கியமானேன் உன்னுள்ளே
ஐயமது விலகியதே



ஒன்றான உறவுதனில்
ஒருபோதும் பிரிவில்லையே

ஓராயிரம் கவிதைகளை
ஓயாமல் படைக்கிறேனே

கனிவான காதலால்
காந்தமாய் கவர்ந்தாயே

காத்திருக்கும் தருணமெல்லாம்
காரிகையின் நினைவுகளே

கிழக்கின் ஒளியானாய்
கீழ்திசை வானிலே

பனித்துளியாய் கரைகிறேன்
பாவையே உனதன்பிலே

அன்புக்கு அவளென்று
உரைத்திடுவேன் உனதுபேரையே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# விவசாயம்

விவசாயம் மட்டுமே எதிர்கால
உலகத்தின் உயிர்
மொழிகளாய்

இன்று விவசாயம் விலக்கப்பட்ட
சாதிகளாய் விவசாய நிலங்கள்
கட்டிட காடுகளாய்

விவசாயம் தொலைத்த விவசாயி
பசியாற நகரத்தின் நடுவில்
இரவு காவலாளியாய்

தொழில்நுட்பம் தேடி ஓடும்
இளமைக்கு விவசாயம் வெறும்
மண்ணின் அடையாளமாய்

தொலைக்காட்சி பெட்டியின்
முன்னால் அமர்ந்து சோறு
தின்பவனுக்கு புரியவில்லை

விவசாயத்தின் வேதனைகளும்
அவர்களின் வலி நிறைந்த
வாழ்க்கையும்

மரணம் வரை சேற்றில்
நடமாடும் விவசாயி மட்டுமே
என்றும் நமது குலசாமியாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# என்றும் உச்சம் நீயே





நீ கடந்த பாதை கடினமாகலாம்.
சந்தித்தவே புதிராகலாம்
ஆறுதலுக்கு தோழமை
இல்லாமல் போகலாம்

உனக்கான ஆறுதல்
கிடைக்காமல் இருக்கலாம்
உன் அருமை
தெரியாமல் இருக்கலாம்

பெருமை அறியாமல் இருக்கலாம்
உன்னில் பல மாற்றம் காண்பாய்
திறமையின் முழு வெளிப்பாடும் நீயே

உலகையாளும் பறவையும் நீயே
முயற்சியின் உச்சம் நீயே
ஆற்றலின் ஆளுமையும் நீயே
உனக்கில்லை எல்லையே

உனக்கேது தோல்வியே
என்றுமே உச்சம் தொடும் சிகரமாய் நீயே
நீயே உனக்கான நம்பிக்கை
உன்னை நூறு முறை நிராகரித்தாலும்

இன்னும் ஒரு முறை முயற்சி செய்
சாதனை படைத்து சரித்திரம் செய் என்றுமே
வெற்றி நிச்சயம்
இறைவனே உனக்குத் துணை

கவிஞர் ஏ எம் முர்ஷிதா பேகம், அக்குறணை, கண்டி (இலங்கை)

# வார்த்தை பேசிடாத மௌனம்



வார்த்தை ஒன்றை ஒன்று அரவணைக்கும்
வார்த்தை ஒன்றை ஒன்று கசக்கிப் பிளிந்திடும்
முழுசா இந்த அலசலை அலசுங்கள்
அப்புறமாய் என்ன சொல்வதெனத்
தீர்மானியுங்கள்!

வார்த்தை பேசிடாத நிகழ்வுகள் அது மட்டும் என்னவாம்.
"நிகழ்வு" நெஞ்சில் பசுமையாய் படர்ந்திருக்கும்
இன்னுமொரு சந்தர்ப்பத்தில்
வறண்ட பாலைவனம் போலிருக்கும்.

"அன்பு" ஆயுதமாகி எமைக் கொல்லாமல் கொல்லும்
அன்பின் வயமானது கண்டு நம்மை அடிமையாக்கிட
துடித்ததிடும் உறவுகள்!
எது? எதுக்கு? வினா எழுப்பிடாது.
" வார்த்தை " க்கு கீழ்படிந்து
வாழ்த்துக்கள் கூறும்போது
வசமாகி நிற்போம் இறைசந்நிதியில்!

பழிக்குப் பழி வாங்கி நிற்பதால்
பெரிதாய் வளர்ந்து விடுவதில்லை உயரத்தில்!
உன் உறவிடமோ நட்பிடமோ
புரிந்துவிடு மறந்து விடாதே
வார்த்தைகளையும் நிகழ்வுகளையும்!

நீ சந்தோசிக்கும் நாளில்
நிம்மதியாய் இருந்திட
எக்காரணம் கொண்டும் உன் எண்ணங்களை
பகிர்வு செய்யாதே!
அதுவே
உன் காலை சுற்றிய பாம்பாகிவிடும்!

உன் பிள்ளைகளை நேரிய
வழியில் கொண்டு செல்ல
உன்னிடம் இருக்கு நல் மருந்து!
பிடிவாதம் கர்வம் கோபம்
பழிவாங்குதல் போன்ற
கொடிய நோய்களை
இல்லாதொழிக்க " மௌனம் " தான்
நான் கண்ட மருந்து!

எது எப்படியாயினும்
மௌனம் ஒன்றே சிறந்தது

கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை, இலங்கை

முகில்மழை தோய்ந்த நளின மாலை
மணிமுத்துச் சிரிப்பு மலர்ந்த முகமே
மாமலர் வாசம் வீசும் காற்றே
மனமுருகும் இன்சொல் இசைநாதம் நீயே

தாய்தனக் கொடி விரிந்த நிழலே
தங்கநிறக் கதிர் வீசும் ஒளியே
கன்னிமதி புன்னகை தூறும் நேரம்
எனது மூச்சாய் வாழும் எனதுயிரே

செந்தமிழ் சொல் போல இனிமை
செல்வமெனும் பொற்கால தாய்மை
பருவங்கள் மாறினாலும் மாறா என்றும்
பாசமெனும் மகள் நீயே எனக்கு.



கவிஞர் திருமதி சினேஹா வினய், சென்னை

# இதயம் இறந்த மனிதர்கள்

உண்மையோடு இருந்தவர்களை ஊமையாக்கிய மனிதர்கள்
உறவென்று பழகியவர்களை உதறித்தள்ளிய மனிதர்கள்
உயர்வாக வைத்ததற்கு உரக்கவே அடித்தவர்கள்
உடையாது காத்ததற்குத் தூள்தூளாய் உதிர்த்தவர்கள்

நலவுக்கு மேல் நலவு செய்ததற்கு
நரம்பில்லா நாவால் வந்ததெல்லாம் பேசினார்கள்
நலவுகள் அடையும் வரை நண்பரென்றர்
நலவடைந்ததும் நண்பரா நீயென்றர்

அநீதி இழைத்து விட்டு நல்லவனாய் வேடமிட்டு
தானே சரியெனப் பிறரையும் நம்பவைத்து
அகந்தையில் மார் தட்டிக் கொண்டனர்
அதர்மத்திற்கு ஒன்று கூடி மகிழ்ந்தனர்

தவறென்று அறியாது செய்த சிறுதவறுக்கு
திருத்திச் சொல்லாது பறையடித்துத் திரிந்தனர்
திரியாயிருந்ததைப் பற்றவைத்துப் புகை மூட்டினர்
திணறியதைப் பார்த்து உச்சிகொட்டி மகிழ்ந்தனர்

நம்பிக்கையாய்ச் சொன்னதை உலகறியச் செய்தனர்
நம்ப வைத்துக் கழுத்தை அறுத்தனர்
நாகரிகம் அறியா நல்ல மனிதர்கள்
நன்றி கெட்ட உத்தம புத்திரர்கள்

விதைக்க வேண்டிய நல்வார்த்தைக்குப் பதிலாகவே
பிறர் மனதை வார்த்தைகளால் வதைத்தனர்
புண் பட்டமனதோ அமைதியாக இருக்கவே
தவறனைத்தும் இவரே செய்தார் என்றனர்
இறைவன் இருப்பதையே மறந்த இதயங்கள்



கவிஞர் ஜஸ்ரீரா ஜலீல்

# மழலைச் செல்வம்

மனதின் வலிகளை போக்கும் மருந்தாய்!
வாழ்வின் மாற்றங்களை தரும் மகிழ்வாய்!
கவலைகளை களிப்பாக்கும் காதலாய்!
இருட்டில் வெளிச்சம் தரும் ஒளியாய்!
இனிமையான நினைவுகளை தரும் இன்பமாய்!
இதமான இச்சைகள் தரும் காவியமாய்!
கண்ணீரை காணாமல் செய்யும் கடவுளாய்!
பாரங்கள் போக்கி!
பறிதவிப்பை நீக்கி!
மடியிலே தவழ!
மணிச் சுடர் ஒளியாக!
மழலையே நீ வருவாயாக !




கவிஞர் தி. கமலவேணி, மானியம் ஆடூர்

# கலைந்த கனவு

வேடிக்கைகாட்டி விலகும் மனது
உனக்கு மட்டும் வாய்த்ததால்
என் விருப்பம் புரியவில்லையோ?

அறிந்த முகங்களைத் தாண்டி
புதிதாய் எதுவும் தெரியாத நிலையில்
வேடிக்கை மனம் மீண்டும் வருவாயென்ற
உயிர்ப்புடன் காத்திருப்பது
உன்மேல் கொண்ட காதலன்றி வேறென்ன?



திருவிழாக் கூட்டத்தில்
தாயைப் பிரிந்து தவித்திடும் குழந்தை
ஆதரவு தேடி அறட்டும் மனநிலையில்
பற்றிப் படரும் கொழுக்கொம்பு தேடுவது
ஆதி முதல் இன்று வரை தொடர்கிறது!

எத்தனை கண்கள் எவ்வளவு தேடல்கள்
எத்தனை பரிவுகள் எவ்வளவு விருப்பங்கள்
ஒன்றிலிருந்து மற்றொன்றாய் மாறும்
மாயத்தின் மனநிலை யாவும்
கிளைதாவும் குரங்கெனக் குதித்தது
ஏதேனும் ஒன்றில் இளைப்பாறும் மனநிலையன்றி
வேற என்ன லாபம் அதிலிருக்கும்?

ஆனால் கூட ரகசியம் உடைந்து
தேவைகள் தீர்ந்து கனவுகள் கடந்து
உறவுகளை வளர்க்க தெரிந்தவளுக்கு
நாள் நட்சத்திரமெல்லாம்
பெரிய பொருட்டாய் தெரிவதில்லையென்ற
மனநிலையோடு வாழப் பழகிடத்தான்
அம்மனிடம் வேண்டுதல் விட்டாள்
வேடிக்கையாய் நடக்குமென்ற நம்பிக்கையில்.

நிறைவவேறாத விருப்பங்கள் கனவு போல தான்
விடிந்ததும் கலைகிறது வழக்கம்போல்.

விடியல் வந்த பின்னும்
உறக்கம் கலையாத மனநிலையோடு
நான் மட்டும் அப்படியே வாழ்கிறேன்
உன் நினைவாக.

கவிஞர் யாழிசைச்செல்வா, தேனி மாவட்டம்

# நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்

நினைப்பதெலாம் நடந்திடவே எழுகிற ஆவல்
சரியென்பேன் முறையென்பேன் ஆனால் கூட
மணப்பதனால் அதுபூவாய் இருப்பது மில்லை
மறந்திடவே எண்ணுவர்க்கு இதுபெரி தில்லை.

கனவென்றால் நனவாகக் கண்துஞ் சாமல்
கலங்காமல் நழுவாமல் கைவர வேண்டி
நினைவதனை விட்டகலா நெஞ்சுரம் கொண்டோர்
கொடையாக ஈந்ததுதான் எங்கும் காணீர்.

அவமானப் பொழுதுகளே வாழ்க்கை முழுதும்
அடியெல்லாம் பெருவலியைத் தந்தால் கூட
உவமானம் உரைத்திடவே அவரை விட்டால்
வேறெவர்தான் முன்வருவார் அழியாச் சான்று.

அறிவதுவும் தெளிவதுவும் பெரிதெனக் கண்டோர்
அறிவியலைத் துணைக்கழைத்து இமயந் தொட்டே
சரிநிகராய் வலம்வந்தார் ஆணும் பெண்ணும்
சரியானது ஓர்நாளில் வென்றேத் தீரும்.



உழைப்பெல்லாம் எமக்கில்லை உருட்டும் பேர்கள்
இன்றளவும் வெட்கமிலா மூடப் பழமை
பிழைப்பொன்றே போதுமெனும் தீஞ்செய லாலே
பிடித்தாட்டல்த் தொடர்கிறதே என்னே கொடுமை.

மனிதருளேப் பிரிவினைகள் இவர்க்குக் காசு
மதசாதி இனமென்பார் அதுவே மாசு
அணிதிரள்வாய் மனிதகுல விடுதலை வேண்டின்
எண்ணியது யாவையுமே முடிதல் நன்றாம்.

என வேண்டும்,

கவிஞர் சு. சுரேஷ்பாரதி, குமிழமுடிப்பூண்டி

மொழியற்ற மௌனங்கள்
சப்தமற்ற மொழிகள்.

ஆறுதலின் அடிவானத்தில்
மெல்ல மறையும்
நினைவு நிலாக்கள்.

சாளரத்தின் கண்களுக்கு
காத்திருப்பின்
வலிகள்.

சென்றதும் மூடிக்கொள்கிற
கதவுகள் போல்
பிரிவிலும் கொள்கிற
நினைவுகள்.

அருகிருந்தும் கேட்கப்படாத
தூரத்து நினைவுக் கூச்சல்.

உண்ண மறப்பதின்
வியாதிகளின் பிறப்பிடங்கள்
நினைவுகள்.



கவிஞர் கோ. டோன்குமார்

விழிகளின் எச்சமே பார்வையாகிறது
நினைவுகளின் மிச்சமே கனவாகிறது
சொற்களின் வெற்றியே கவிதையாகிறது
வாழ்க்கையின் வலியே பாடமாகிறது
ஏதோ ஒரு தொலைத்தல் தான் காதலாகிறது
ஏதோ ஒரு உணர்ச்சி தான் கண்ணீராகிறது
புரிய வைக்கும் ஒரு புள்ளிதான்
வாழ்க்கையாகிறது
/
ஆழ்மனதின் எல்லைகளை
முதலில்
அறிந்து கொள்ளலாம்.
அதன் பிறகு
இலக்குகளைத் தீர்மானிக்கலாம்.
/
மெழுகுவர்த்தியின்
முதல் சொட்டுக் கண்ணீர்
அதை நிற்க வைக்கிறது.
நமக்கும் அது போலவே
தோல்விகள் எப்போதும்
வெற்றியை நோக்கியே பயணிக்கும்.



கவிஞர் இரா. மதிராஜ், அலப்பட்டீசாக் கவுண்டன் புதூர்

# மரம் தேடும் பறவை

அந்தப் பறவை
செல்லரித்து சல்லடையாக்கப்பட்டு
வேரறுந்து போன நேச மரத்தை விட்டு
தொலைதூரம் பறக்கிறது.
அன்பின் கிளையில் இளப்பாற இடம் தேடுகிறது.

அந்த ஒரு சிறிய இதயக்கூட்டிற்குள்
ஒளிந்துக்கிடக்கின்றன ஓராயிரம் கனவுகள்
சிறகடித்தால் மட்டும் பலித்திடுமா அவை அத்தனையும் ?
இல்லை பட்ட வலி தான் மறந்து போகுமா?




பிரபஞ்சத்தின் அச்சாணியான பாசம் கூட
வேசம் தரித்த நிதர்சனங்கள்
முகத்தில் அறைந்தபோதே புரிந்தது
எத்தனை வஞ்சிப்புகள்
வார்த்தைகளில் மட்டுமே வாழ்ந்து
மடிந்து போன பல வாக்குறுதிகள்

பிரியமான பிடித்தங்கள் எல்லாம்
காலத்தின் பிடியில் பிடிவாதமாய்
பிடுங்கப்பட்டனவே.
சொல்லாத சொற்களுக்கிடையில் செறிந்துள்ளது
மௌனித்த மனதின் பேரமைதி.

அடைமழையின் பின்
அசையாது நிற்கும் பெருமரம் போல
கணத்துப்போகிற நெஞ்சமெல்லாம்
நெருஞ்சி முள் காடு
தனிமையில் சிக்கி தவிக்கும்
அந்தப் பறவை தேடுவதெல்லாம்
ஒரு சோடி காக்கைகளாவது குடியிருக்கும்
ஓர் மரத்தைதான்

விதி வரைந்த பாதையில்
படிந்து படரும் தற்காலிக நிழலின் இனிமையில்
இனியும் தொடரும் அதன் பயணம் மரம் தேடி
கார் மேக பிரசவிப்பில் விரல் தொட்டு தெறித்த
ஓர் மழைத்துளியின் ஈரமாய்
கொஞ்சமே கொஞ்சமாய் அன்பிருந்தால் போதும்
அந்தப் பறவையும் வாழ்ந்து விடும்.

ஆழ்ந்த பெருமூச்சுடன் ஆசுவாசமாய் இளைப்பாறும்

கவிஞர் முபாரக் பாத்திமா ரஸீபா, மதவாச்சி (இலங்கை)

எழுத முடியாத கவிதை பெண்
விழ்த்த முடியாத உறவு பெண்
இயற்கை தந்த அற்புதம் பெண்
ஐம் பூதங்களின் வடிவமே பெண்

அகிலம் போற்றும் அதிசயம் பெண்
ஆக்கமும் உருவாக் கமும் பெண்
மேன்மையும் தாய்மையும் பெண்
அன்பையும் பண்பையும் விதைத்தவள் பெண்



தண்ணீகர் யில்லா தியாகமும் பெண்
தன்னைத் தானே செதுக்குபவளும் பெண்
சிற்பியாய் குடும்பத்தை வடிப்பவள் பெண்
சீர்படுத்தி துயர் களைபவள் பெண்

கலைகளுக்கு தலைமகளாய் இருப்பவள் பெண்
உலகை ஆள்பவளும் பெண்
ஆற்றலுடன் அற்புதம் செய்பவள் பெண்
மாற்றங்கள் பல நிகழ்த்துபவளும் பெண்
தாரமாய், தோழியாய் சகோதரியாய் பெண்
உறவாய் உயிராய் ஆள்பவளும் பெண்
புவியிலே புண்ணிமம் செய்தார் பெண்
சிந்தை எல்லாம் குடும்பநலனே பெண்

ஏற்றம் கண்டிட உழைப்வள் பெண்
சோர்வு அண்டாமல் சுறுசுறுப்பாய் பெண்
கருணை உள்ளம் கொண்டவள் பெண்
அடிமை விலங்கை உடைந்தவளும் பெண்

பெண்ணையும் பெண்மையும் போற்றுவோம்
துணைமாய் நின்று காப்போம் நாம்
தன்நலம் மறந்து சேய்நலம் காப்போம்
நிகரில்லா தனிப்பெரும் உறவை மதிப்போம்

கவிஞர் ஆதி. சுப. சரவணன், மூலகுளம் (புதுச்சேரி)

திருமணமாம் திருமணம் அம்மையப்பனுக் குத்திருமணம்,
திக்கெட்டும் புகழ்பரப்பித்தன் திருவடியில் சரணடைந்த
அடியார்கள் அல்லல்களைக் கனப்பொழதில் போக்கிடும்
அருள்மிகு செண்பகவல்லித் தாயாருக்கும் உடனுறையும்
அழகான பூவனநாதருக்கும் நடக்கப்போகும் திருமணம்.

முத்தக்குளித்த தூத்துக்குடி மாவட்டம் தன்னில்
சத்தானவொரு ஊருள்ளதெனில் அதுவெந்தன் கோவில்பட்டியே;
இதனையானுரைப் பதற்குக்கடலமிட்டாயொரு காரணமே!
அதனொடுயெந்தனூ ருக்குப்புகழ்சேர்த் ததுஹாக்கி விளையாட்டே!
அதனினும் இவ்வூருக்குப் புகழ்சேர்ப்பது இங்குள்ள
இதயத்தின் சுமைகுறைக்கும் செண்பகவல்லியின் தண்ணருளே!

இத்தலம் காணும் திருவிழாக்கள் மாதந்தோறும்;
அத்திருவிழாக்களில் சித்திரைத் தீர்த்தவாரியே பெரிதென்றாலும்
அப்பழக்கின்றி தமதுவுள்ளம் திகழநாள்தொறும் தம்கரம்
கூப்பித்தொழும் திருத்தொண்டர், பொதுமக்கள் யாவருக்கும்
ஐப்பசி வந்தால் ஆனந்தம் பொங்கிடுமதற்கு
அப்பன்பூவன நாதரம்மையோ டுமணநாள் காண்பதேயாகும்!



ஐப்பசி பதினெட்டில் கொடியேற்றம் கண்டோம்;
ஐப்பசியிருபத் தியாறில்தேரோ டும்கோவில் பட்டியிலே!
ஐப்பசியிருபத் தொன்பதில் மணமுரசு முழங்கக்கண்டு
ஐயனை அன்னையோடு வணங்குபவர் அடைவரதை
ஐயமின்றிசொல் வேனளவற்ற ஆனந்தமிப் பிறவியிலென்றே!

வெம்பக்கோட்டை யைவாண்ட செண்பக மன்னன்
வணங்கி கட்டிய கோவிலென்பதால் அன்னைக்கிங்கே
செண்பகவல்லி யென்றதிருநாமும் பூவனக்காட்டில் எழுந்தருளியதால்
சதாசிவமாம் சிவனுக்குப் பூவனநாதரென்ற திருப்பெயரும்
அமையப்பெற்று கிளாமரத்தை தலவிருட்சமாகவும் தீர்த்தமது
அகத்தியர் திருப்பெயராலும் அழைக்கப்பட தென்பாண்டிநாட்டின்
ஆலயங்களுள் மிகச்சிறந்தவிவ்வா லயத்தின்திருக் கல்யாணம்காண
அன்பர்களே வாருங்களெங்கல் கோவில்பட்டிக்கென அழைக்கின்றேனே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

வர்ணங்கள் இல்லாதவரை
வடிவம் காணாத
வெண்மை சுவரும் அழகெனில்
வார்த்தைகள் கொடுக்காத வரை
வாய்க்குள்ள இருக்கும் நாவும் கூட
நயமான அழகுதாதே

மௌனமாக நகரும் நாட்களையும்
மரணமாக மாத்தும் உறவுகள்

விழுதில் கூட விசமில்லை
விலைபோகாத பல்லிடுக்கில்
பதுங்கி கிடக்கும் பாரதூரமான
உயிர் கொள்ளியே

நல்லவை கூறும் நாவிடுக்கில்
நயவஞ்சகமும் நரகமும்
நளினமான மொழிநடையில்
நம் முன் உரையாடுதே

தேள் என்று கொட்டி தீர்க்கும்
வார்த்தைக்குள் தேன் நிலவும்
மறைந்து தான் போகின்றது
மனிதன் மறந்த நாவினிலே



கவிஞர் பரிமளா மணி, தியத்தலாவ (இலங்கை)

# அமுதமான நாட்கள்

அமுதமாய் அமைந்திட்ட
அந்த நாள் வாழ்வுதான்
ஆனந்தம் தந்திட்ட
ஆகச்சிறந்த நாட்கள் தான்.




இன்பம் பொங்கும் உறவுகள்
இனிமை சேர்த்துட்ட நாட்கள்
ஈகை குணம் நிறைந்திட்ட
இனிமை பொங்கும் நாட்கள்.

உண்மையும் நேர்மையும்
உயர்வென வாழ்ந்திட்ட
அற்புத காலங்கள்
பணமே வாழ்க்கை என
நிலைத்திட்ட உலகினிலே
பண்பான குணமே
உயிரென வாழ்ந்திட்ட
பகை மறந்த நாட்கள்.

சக உயிரையும் உறவென
போற்றி மதித்திட்ட காலங்கள்
அன்பு நட்பு பாசமே
நிலையான செல்வமென

துன்பத்திலே தோள் கொடுத்து
இன்பத்தினை பகிர்ந்து எடுத்த
அந்த நாள் வாழ்வுதான்
அமுதமான நாட்கள் தான்.

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# நினைவில் நீ

நினைவில் நீயும் நிலைத்தே யெந்தன்
புனையும் புகழில் புதிராய் யெழுந்தாயே
கற்றிடும் யாவுமே கதிரவன் ஒளியிலே
வெற்றியும் நிரம்பிய வெண்சாமர நிலவாமே

வசந்த கரமாய் வஞ்சியும் காத்தே
இசைந்த உறவாய் இன்னிசை மலருமே
தெரிந்த சுகமாய் தெளிவாய் வளர்ந்தே
விரிந்த மலராய் விழுதாய் சிறப்பாயே



உயர்ந்த வடிவின் உரிமை நிலவாய்
பெயர்ந்த பண்பாய் பெரிதான நட்பாமே
பிரிவால் துடிக்கும் பிரிதான உயிராய்
பெயர்ந்த பண்பின் பெருதுயர் நட்பே

செல்வச் செழிப்பில் சேர்ந்திடும் பெருமை
வெல்லும் வளமாய் விந்தை புரியுதே
கடமையில் உயர்ந்த கருத்தான அறிவாய்
திடமாக வளர்க்கும் திறனின் உயர்வே

சுற்றம் சூழ்ந்தே சுகமாய் வளர்ந்தே
வெற்றிடம் காணா வெம்மை ஒளியே
கண்ணும் வாடியே கருத்தாக உனையே
எண்ணும் மனதாய் ஏங்குதே உயிரும்

சின்ன முத்துகளாய் சிணுங்கிய பல்வரிசையும்
கன்னக் குழியிலே கலக்குதே முகத்திலே
சிந்தை சிதறியே சிறகடிக்கும் குயிலாக
விந்தை புரியுதே வியப்பான உள்ளத்திலே

வளங்கள் பெருக்கும் வசந்த உறவிலே
களமும் அமைத்தே கணக்காய் சிறப்பாயே
விந்தை செழித்த விருந்தது படைக்கும்
எந்தை உயிராய் என்னில் விழைவாயே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# பொய்மை சாரா பெண் மடலே!

கலவை பூசாத அழகிய அருளில்
இமைகள் ஏங்கும் பெண்ணின் கண்கள்
இயற்கை வண்ணம் சூடத் தான் சொல்லும்
அவளின் எண்ணங்களில் சில கீறல்கள்
வெளி உலக கலாச்சாரம் தாங்கும்
கண்கள் ஏங்கி கொட்டும் வெண்மை படலங்கள்
அதுவும் அழகுதானே காக்கை தன் குஞ்சை வெறுக்கதே
அதனால் நீயும் மயில் என்று ஆடாதே
தன் அழகை மறைக்க இடும் சில சாயம்
வளராத ஏக்கத்தை வளர்க்கும் மரணத்திற்கு சாட்சி
அதை விடும் பெண்ணே பாராய்
உன்னை போற்றும் சூழும் வையகம்
பாதம் சமர்ப்பிப்பது வார்த்தையின் தூண்டுதலோ?
விட்டுவிடு
இயற்கை வேண்டி எதையும் செய்யலாம்
எனில் செய்யாமை ஆக கூடா
செயற்கை வேண்டுவது நியாயமோ?
எதையும் பாராய் , நீயும் அதை கூறாய் பெண்ணையே
பாரதி கூறிய சரித்திர கண்மணி
கண்ணன் அழைத்த காதலில் ருக்மணி
அவையும் தாண்டிய அழகி நீயாய் அன்றோ?
இழுப்பதை வருந்தி, நடப்பதை ஏற்பதாய் இச்சிறு மடலே.



கவிஞர் ஸபா, கண்டி (இலங்கை)

சுழன்ற பொழுதுகள்
காலசுழற்சியில்
அடுக்குத்தொடரின் ஆழத்தின்
படியிலமர்ந்தும்

தூசிகள் படியாத விந்தையும்
மனம் தொட்டதும் விழிக்கும்
மாயமும்

நினைவு தப்பும் வரையில்
நினைவுக்கடலில் அலையாய்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

உன் உச்சி முதல் பாதம் வரை
இதுவரை உன் அழகை
ஓராயிரம் கவிஞர்கள் வர்ணித்தும்
இனி வர்ணிக்கவும் இருக்கலாம்
அவர்களுடன் என்னையும் ஒருவனாய்
சேர்த்துக் கொள்வாயா?
நானும் உன் அழகை வர்ணிக்க.



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

ஏழு ஸ்வரங்களிலேதான்
எத்தனை எத்தனை பாடல்கள்
மனிதன் பிறந்தது முதலே
இசையோடுவே பயணிக்கிறானே



பிறந்த குழந்தைக்கு
அன்னையின் தாலாட்டு தேனமுது
அவனின் ஒவ்வொரு நிகழுமே
சிந்தனையை தூண்டி வாழ்க்கையையே
இசை மாற்றுகிறதே!
ஆண்டவனையே இசையால் மகிழ செய்யலாமே!

இசைக்கு மதம், மொழி, இனம் எதுவுமில்லை
கல்யாணி ராகமும் காலையில் பாடும் பூபாளமும்
மழைக்கு அமிர்தவர்ஷணியும்,
சோகத்திற்கு முராரியும் பயணப்படுகிறதே !

கிருஷ்ண பரமாத்மா தன் புல்லாங்குழல் இசையால்
ஐந்தறிவு மாடுகளையே மயங்கச் செய்தாரே!
இசைக்கு மயங்காதவர் ஒருவரும் இலர்.

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

அன்புடையார் துன்புறுதல் கண்டே ஒருவன் கண்கள் கண்ணீர் உகுக்கும்
தன்னை யாரும் காணக் கூடாதென தாளிட்டு எவ்வாறு மறைக்கும்?

அகத்திலே அன்பிலார் எல்லாம் தனது என்பார்
அகந்தையின்றி அன்புடையார் என்பும் பிறர்க்கு என்பார்

அரிய உயிர் பெரிய உடலில் பொருந்துவது ஏனோவெனில்
உரிய அன்போடு பொருந்தி வாழ்வதற்கேயாம்

பிறர் தம்மை விரும்பும் தன்மையை அன்பு வழங்கும்
உற்ற நட்பைக் கொடுத்து ஊருக்கே முழங்கும்

அன்புடையராய் திகழ்தலின் பயன் யாதெனக் கேட்பின்
அன்புடை இல்வாழ்க்கையில் இன்பமும் மறுமையில் நிகழும் பேரின்பமுமே

அறம் புரிவதற்கு மட்டுமே அன்பு காரணமென்பர் அறியார்
வீரம் புரிவதற்கும் அதுவே துணையென உணர்வர் பயன் தெரிவார்



என்பு இல்லாத உயிர்களை வெயிலே வருத்தும்
அன்பிலாத உடல்களை ஓயிலாய் அறமே திருத்தும்

அன்பில்லாமல் மக்கள் வாழும் இல்வாழ்க்கை நிகராகுமே
நன்றாய் பட்ட மரம் தளிர்க்குமே சகாராவிலே

உள்ளுறுப்பில் அன்பு என்றும் ஒட்டாதவரிடத்தே
துள்ளித் திரியும் புறத்துறுப்புகளால் பயனேதும் கிட்டாதே

.அன்பு தழுவிய யாக்கையே உயிர்நிலை பெறும் வீடு
அன்பு வழுவிய போக்கைப் பெற்றால் என்புதோள் போர்த்திய கூடு

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# காலை!

பூக்களின் இதழ்கள் காண
விடியும் காலைப் பொழுது

மனதோடு இசைந்த நடைப்பயணம்
மனதின் இசை கேட்க

மலர்கள் கண்விழித்து காத்திருக்க
மலர்களின் அறுவடை மலர்மாலையாக்க

செய்திகளால் மனங்களை காயப்படுத்த
செய்தித்தாளோடு விளம்பரமும் பயணம்

ஆவின் பாலும் வந்தடைய
ஆவலாய் தேநீர் பருக


பதற்றமான ஓசையோடு தலைப்புச்செய்திகள்
பதற்றத்தை திணிக்கும் தொல்லைக்காட்சி

கடமைக்கு காலை உணவருந்தி
கடமையாற்ற ஓடும் உயிர்கள்

எதிர்காலம் சிறப்பாக பள்ளிக்கு
எறும்பாக குழந்தைகளின் பயணம்

உயிர்களனைத்தும் உயிர்பெறும் காலையில்
உறவுகளும் சீர்பெற இறைவணக்கம்

இவையனைத்தும் வாழ்வின் சங்கிலியாக
இழுக்கிறது தினமும் வாழ்வினை



அதிகாலை பொழுதினில் நற்சிந்தையோடே
அகமகிழ திடமாய் நடைபோடு

நன்மைக்கும் தீமைக்குமான போட்டியில்
கவனமாய் வாழ்வியல் பயின்று

வாழ்வதும் இனிமையே!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

அவள் (!)

ஓடும் எண்ணங்களின்
ஓய்வு (இல்) அவள்.

உழல் மனத்தில்
ஊழ் வில(ள)க்குபவள்.

கண்ணால் காண
கை பொத்தி காப்பவள்.

மெய்யாய் யாரோ?? அவள் (!)



கவிஞர் அர்ச்சனா மாரிமுத்து, பெரம்பலூர்

# விழித்திடு! தவிர்த்திடு!

தாய்மொழியைக் கற்பதை தவிர்த்தலை தவிர்த்திடு!
சேய்கள் நாவினில் தாய்மொழி தவழட்டும்!
பொய்யான வாக்குறுதி, போலி முகங்களுடன்
நயவஞ்சகமாய் வலை விரிப்பர்! விழித்திடு!
மாய உலகினை மெய்யென்று நம்பாதே!
திரையினில் காண்பதெல்லாம் இரசித்திட மட்டும்தான்!
தெருவெங்கும் கடையுண்டு! தினம்குடிப்போர் இங்குண்டு!
உருக்குலைந்து நோயுற்று உயிர்நீத்தோர் பலருண்டு!
சிறுவயதில் நற்பழக்கம் தொடர்ந்திடுமே இறுதிவரை!
திசைமாறிப் போனாலோ தீமையுண்டு வாழ்வினிலே!
நெகிழிப் பயன்பாடு நிலமகளின் நெஞ்சடைக்கும்!
நெகிழியைத் தவிர்த்தாலே நிலத்தடி நீருயரும்!
அகிலமெங்கும் நீர்ப்பஞ்சம் அண்டாமல் காத்திடுமே!
கனிமவளக் கொள்ளையினால் காண்கின்றோம் தீமைகளை!
வனவளங்கள் குறைந்தாலோ வான்கொடையும் பொய்த்திடுமே!
வனங்களை, நீர்நிலைகளைக் காத்தலே நம்கடமை!
இனிவரும் தலைமுறைகள் இன்புற்று வாழ்ந்திட
இயற்கைச் சூழலை மாசின்றிக் காத்திடுவோம்!
இணைய உலகினிலே ஏராள மோசடிகள்!
இன்னும் ஏமாறல் நன்றோ? விழித்திடுவோம்!
இதுகுறித்து ஊடகங்கள் எச்சரிக்கை செய்தாலும்
மதியிழந்து வீழாமல் தவிர்த்திடலே நன்றாகும்!
பேராசை, குறுக்குவழி பெருந்தீங்கு விளைத்திடுமே!
சோம்பலின் நிழலில் சோர்ந்து கிடக்காமல்
நாமுயர வழிதேடி நாளும் உழைத்திடுவோம்!
ஒவ்வொரு மனிதருக்கும் தனித்திறன் ஒன்றுண்டு!
ஒவ்வொரு நாளும் உனதென்று உணர்ந்து
செயத்தக்க வினைகளை செவ்வனே செய்தால்
வியத்தகு மாற்றங்கள் விளைந்திடுமே தோழா!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# புதிரானவள்

அன்பிலும் புதிராய்
ஆசையிலும் புதிராய்

புன்னகையிலும் புதிராய்
கோபத்திலும் புதிராய்

எண்ணத்திலும் புதிராய்
அனைத்திலும் புதிராய்

பெண்ணவளோ என்றும்
புரியாத புதிர்தான்!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

## கொஞ்சம் கொஞ்சமாய்



பகிரப்பட்ட செய்தியை
உண்மையா என
யோசிக்காமல்
உறுதிப்படுத்தாமல்

சொல்கையில்
கேட்கப்படும் கேள்வியான
நல்லா தெரியமா?
என்பதற்கு
முதலில் ஆமாம்
மீண்டும் மீண்டுமான
சந்தேகக் கேள்விகளில்
அப்படித்தான் நினைக்கிறேன்

அடுத்தாய்
உறுதியாய் தெரியவில்லை

கடைசியாய்
கேள்விப்பட்டதை சொல்கிறேன்

கொஞ்சம் கொஞ்சமாய்
ஸ்ருதிகுறையும் பதில்கள்

****

## எத்தனைப் பேர்?

செல்வத்துக்கும் மகிழ்ச்சிக்கும்
ஆரோக்கியத்துக்கும் நிம்மதிக்கும்
தனக்கும், குடும்பத்துக்குமான
தெய்வத்திடம் வேண்டுதல்
செய்பவர்கள் மிகப்பலர்.

தன் உறவுக்கும் நட்பு வட்டத்துக்கும்
அறிந்தவர்களுக்குமான
பிரார்த்தனை செய்பவர்கள்
கொஞ்சம்பேர்.

சங்கடங்கள் கஷ்டங்கள்
ஏமாற்றங்கள் சவால்கள் வந்தாலும்
அதை சமாளிக்கும்
ஆற்றல் கொடு
என்று வேண்டுவது
எத்தனைப் பேர் ?

அருவெறுப்பல்ல
ஆரோக்கியத்தின் முதல்படி இவைகள்
மலம் சிறுநீர்
***

சைவம் உண்ணும் விலங்குகளை உண்டால்
அசைவம் என்கின்றனர்
***

எப்போது சென்றாலும்
என்னையே பரிதாபமாய் பார்க்கிறது
அடுத்து அறுக்கபட போகும்
ஆடு கறிகடையில்
***

சருகுகளை சுத்தம் செய்யாதீர்கள்
நடக்கும் போது சப்தமில்லாமல்
என்னவோ போல் இருக்கிறது
***

மரத்தை கொத்தி
புண்ணக்காதே என்றுவிட்டு
வேரோடு வெட்டி சாய்த்து விட்டனர்
***

தீண்டாமை பற்றி என் கருத்து
நாம் அனைவருமே
தீட்டினால் ஆனவர்கள்தான் என்பதே
***

இறந்து பிறக்க ஒரு நொடி போதும்
பிறந்து இறக்க தான் பல வருடம் தேவை
***

எனக்கொரு முஸ்லிம் நண்பன் என்பது
முரணான வாக்கியம்
***



உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமே
பெற்றோர் பொறுப்பு
உள்ள உபாதைகள்
சமுதாயத்தை பொறுத்தது
***

எனக்காய் பிறந்தவள்
என் தாய் மட்டுமே
***

தண்ணீர் ஓடவில்லை
வாய்க்கால் தகராறு

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

யார் வரைந்த
புதுவகை ஓவியமோ!

விரிக்கும்
இறகுகளில்
வண்ணத்தின் அழகோ!

வானவில்லே
வந்தே பறக்கும்
உணர்வோ!



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

பாம்பிற்கு பயப்படவில்லையா?

அத்தியாயம்-4

புதினம்

படம் எடுத்த நல்ல பாம்பைக் கண்ட வசந்த், "இது என்னடா புதிய சோதனை " முணுமுணுத்துக் கொண்டே
பின்வாங்கினான்.
"என்ன செய்யப்போகிறோம்?" என்றவாறு சுற்று முற்றும் பார்த்தான் நரேன்.
அவர்கள் இருவரும் ஒதுங்கி நிற்பதைக் கண்ட டிரைவர் கண்ணன், காரிலிருந்து இறங்கி வந்து, அருகில் கிடந்த கம்பை எடுத்து பாம்பை அடிக்க முயல, அது சீறி விட்டு, திரும்ப காட்டுக்குள் ஊர்ந்து மறைந்தது.
"இந்த காட்டுக்குள்ளே பாம்புகள் ரொம்ப சாதாரணம். ஒழுங்கா ஒங்க வேலய பாருங்க சார்" என்று சொல்லி விட்டு, கையிலிருந்த கம்பை தூக்கிப் போட்டு விட்டுத் திரும்பவும் காரை நோக்கி நடந்தான் கண்ணன்.
"பாம்பு உன்னக் கண்டு பயந்து ஓடிப்போச்சி" என்று சிரித்தான் நரேன்.
"சும்மா விளயாடாதே. நரேன். ஒரு நிமிசம்.. அப்படியே ஆடிப்போயிட்டேன்" என்றவாறு கைக்குட்டையை எடுத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டான் வசந்த்.
"சும்மா தேவையில்லாமல் நேரத்தை வீணடித்தது யார்? நீயா? நானா? எப்போதும் அவசரப்பட்டுக் கொண்டிருந்தாய். இப்ப என்னடாண்ணா நீ தான் இப்போ நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறாய்" எரிச்சல் பட்டான் நரேன்.
"இவ்வளவு பக்கத்திலே கிடைக்கின்ற செடிக்காக ஏன் வீணா அலையணும்ணு நெனச்சேன்" என்று அவன் சொல்லி முடிப்பதற்குள், அருகில் இருந்த குளத்திற்கு நீர் பருக புறாக்கள் கூட்டம் கூட்டமாக வந்து இறங்கிக் கொண்டிருந்தது.

திரும்பிப்பார்த்த நரேனிடம், "இப்பவும் புறாவை இரசிக்க ஆர்ம்பித்து விடாதே ராஜா.." என்று கிண்டலடித்தான் வசந்த்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

## பாம்பிற்கு பயப்படவில்லையா?

## அத்தியாயம்-4

## புதினம்

"நீ சொன்னாலும் சரி சொல்லவில்லை என்றாலும் சரி நான் புறாவை இரசிக்கிறது என் சொந்த விசயம். என்னா அழகா இருக்கு பாரு" இரசனையில் மூழ்கினான் நரேன்.

"சரி சரி வந்த வேலைய பார்ப்போம்" என்றான் வசந்த்.

"அதுவும் சரி தான். சரி நீ அந்த செடியை எங்கே பார்த்தாய்?"

"நாம் கேட்டிலே எண்டர் பண்ண இடத்திலே தான் தெரிந்தது. ஆமா அந்தச் செடி எப்படி இருக்குமுண்ணே?"

"எத்தனை தடவை சொல்லியாச்சு"! என்று ஆயாசப்பட்ட நரேன் "செடியிலே மூன்று வகையா இலைகள் இருக்கும். ஒன்று தாமரை இலைகளின் வட்ட வடிவத்திலே இருக்கும். ரெண்டாவது இலை வாழை இலை வடிவத்திலே நீளமா இருக்கும். மூன்றாவது இலை செம்பருத்தி இலை வடிவத்திலே இருக்கும். மற்றபடி பூக்கள் ஐந்து வகையாக இருக்கும் ஒன்று தாமரை பூக்கள் வடிவத்திலே இளம் சிவப்பு நிறத்திலே இருக்கும். ரெண்டாவது பூ வாழைப்பூ வடிவத்திலே நீளமா மஞ்சள் நிறத்திலே இருக்கும். மூன்றாவது இலை செம்பருத்தி பூ வடிவத்திலே சிவப்பாக இருக்கும். நாலாவது பூ முல்லைப்பூ வடிவத்திலே சின்னதா வெள்ளை நிறத்திலே இருக்கும். ஐந்தாவது பூ ரோஜா பூ வடிவத்திலே நீல நிறத்திலே இருக்கும்" என்று தன் கையிலே இருந்த அலைபேசியைத்திறந்து அதிலே இருந்த படத்தைக்காட்டினான்.

"ம்...ம்... நான் பார்த்த செடியிலேயும் நிறைய வித்தியாசமான பூக்கள் இருந்தமாதிரிதான் இருந்தது."

"சரி சரிஎங்கே பார்த்தாய்?"

"இங்கேதான் ஆஆங்... இந்த வேலியைத்தாண்டி அந்தப் பக்கத்திலே பார்த்த மாதிரி தான் ஞாபகம்"

"ஆமா நரேன்! நான் கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டே வந்தேன். நாம நேரடியா அந்தச் செடி இருக்கின்ற இடத்திற்குதான் போகிறோமா இல்லை.." என்று இழுத்தான் வசந்த்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

பாம்பிற்கு பயப்படவில்லையா?

அத்தியாயம்-4

புதினம்

"வசந்த் சும்மா நீதான் நேரத்தை வீணடிச்சிக்கிட்டேயிருக்க. மொதல்ல நீ பார்த்த செடியைக்காட்டு.. மற்றதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம்" எரிச்சல் பட்டான் நரேன்
"அதுவும் சரிதான் வா வா" என்று வேகமாக நடந்தான் வசந்த்.
பின்னால் வந்து கொண்டிருந்த நரேன் " பாரு இன்னும் அந்தக் குளத்திலே புறாக்கள் என்ன அழகாக இங்குமங்கும்" என்று சொல்லி முடிப்பதற்குள், " எப்பா சாமி! ஆளை விடுப்பா! நீயும் ஒம்புறாவும் வந்த வேலையைப் பார்க்கலாம்" என்று குறும்பாக கையெடுத்துக்கும்பிட்டான் வசந்த்.

"சரி எங்கே பார்த்தாய்? அதச்சொல்லு மொதல்ல"
" அந்தா அந்தச் செடிதான்... பாரு. எத்தனை விதமானப்பூக்கள் " என்று பின்னால் பல செடிகள் அடர்ந்து இருந்த அந்த இடத்திற்கு வந்தவன், " நரேன். பார். இதிலே நீ சொன்ன மாதிரி முல்லைப்பூ, செம்பருத்திப்பூ எல்லாம் இருக்கிறதே" என்று அந்தச் செடியைக்காட்டினான் வசந்த்.

அருகில் வந்து பின்னால் இருந்த செடிகளை எல்லாம் பிரித்துப் பார்த்த.. நரேன், நெற்றியிலடித்துக்கொண்டே, "இவ்வளவு அழகா கிளிப்பிள்ளைக்குச் சொன்னா மாதிரி எவ்வளவு விரிவாகச் சொன்ன பிறகும் வசந்த் உன்னைக் கூட்டிக்கிட்டு வந்தேனே " என்றுக்கத்தினான்
"என்னடா? என்னாச்சு?"
"ம் ம் மண்ணாச்சு... யேய் வசந்த்! இங்கே பார். முல்லைச்செடியும் செம்பருத்தியும் பக்கத்திலே பக்கத்திலே வளர்ந்து பின்னிக்கிடக்கிறதால் பல வகைப்பூக்கள் ஒரே செடியிலே வளர்ந்த மாதிரியிருக்கு" கோபத்தில் காரை நோக்கி நடந்தான் நரேன்.
"ஏய் சாரிடா, வீணாக அலைய வேண்டாமே, நாம் தேடி வந்த செடிதான் இங்கேயிருக்குதேண்ணு நெனச்சிட்டேன்" அவனோடு ஓடினான் வசந்த்.
திரும்பிப்பார்த்த நரேன் " திரும்பவும் சொல்றேன் கேட்டுக்கோ" எத்தனை தடவை சொல்லியாச்சு"! என்று ஆயாசப்பட்ட நரேன்

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

பாம்பிற்கு பயப்படவில்லையா?

அத்தியாயம்-4

புதினம்

தன் கையிலே இருந்த அலைபேசியைத்திறந்து திரும்பவும் அதிலே இருந்த படத்தைக்காட்டினான்.

"இனியாவது குழப்பாமல் அந்தக் கற்பக மின்னல் செடியைக் கண்டு பிடிக்க வா" என்று கத்தினான் நரேன்
"ஏய் சாரிடா", "போ போ நீயும் உன் சாரியும், ஒழுங்காக நான் சொல்ற எடத்துக்குப் போகலாம்." என்றான் நரேன்.

"சரி" என்று நரேனுடன் காரில் ஏறினான் வசந்த்.


தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

வாசிப்பு அனுபவம்

கோபி சேகுவேரா; படைப்பு பதிப்பகம்; பக்கம் 127; விலை ரூபாய் 100; முதல் பதிப்பு 2020

வெறும் சொல் செயலாகிவிடுவதில்லை. எழுச்சிமிக்க எழுத்தோ பிறரை யோசிக்க வைக்கும் எழுத்தோ செயலுக்கான தூண்டுகோலாக மாறும் வல்லமை பெற்றவை.செயல்களை நோக்கி நம்மை செலுத்தாத எத்தகு சொற்களும் இருத்தலுக்கானவையல்ல. கனிகளையும் அழுகவைத்து நம்பிக்கையற்றத்தனத்தை நமக்குள் ஏற்படுத்தும் சொற்களால் பயன் ஏதுமில்லை. சொற்களின் ஆற்றல் மனதிற்குள்ளே விதையென விழுந்து செயல்கள் எனும் விருட்சமாகிவிடுகையில் அவை சாகாவரம் பெற்று நிலைத்து விடுகின்றன.கார்முகி தொகுப்பும் அப்படியான சொற்களுக்குள் எழுச்சியை விதைக்க வந்திருக்கிறது.சாதி மறுப்பு சமகால அரசியலின் பகடித்தனம் இளையராஜாவின் இசைக்குள் வசமாகிவிட்ட உயிர்ப்பு காதலுக்குள் கசிந்துருகும் இளமை சமூக ஏற்றத்தாழ்வுகள் மீதான கோபம் கடவுள் மீதான கேள்வித்தனம் பகுத்தறிவு என சகலமும் கலந்து வாசிப்பின் எண்ணங்களுக்குள் கலந்துவிடத் துடிக்கின்றன.




1. ஹமாரா தேஷ்ஹே, 2. கார்முகி, 3.இசையில் தொடங்குதம்மா, 4. வாழ்தலும் வன்மமும் என நான்கு பகுதிகளைக் கொண்டு கட்டமைப்பில் வந்திருக்கும் கார்முகியில் இசை காதல் அரசியல் என்ற சில பகுதிகளும் இடம்பிடித்து மதவெறியர்களை, அரசியல் தரகர்களை, மூடநம்பிக்கைகளை ஈவு இரக்கமற்ற வரிகளால் சாடுகிறது. சமகால இளைய தலைமுறையினரின் தகவல் தொடர்புக் கருவிகளால் ஆளப்படும் மனங்களை வெளிப்படுத்தும் கவிதைகளும் இதழில் நிறைந்திருக்கின்றன.

கவிஞர் இளையவன் சிவா

"யார் தமிழன்? இந்த கேள்விக்கு என்ன சொல்லிற முடியும் உன்னால. சாதின்னு காரணம் சொல்லி தெருவுல ஊட்டுல கோவில்ல விடாத அவமானத்தை அனுபவிச்சிருக்கியா ஆண்ட மயிரான்னு பெருமைக்கு மட்டும் வக்கில்ல உங்கூட்டு பெரியவங்க எங்கூட்டு சின்னப் பொடுசப் பார்த்து கையெடுத்து கும்பிடும்போது உனக்கு ரத்தம் கொதிச்சிருக்கா. காதலிச்ச குத்தத்துக்கு எம்புள்ளைங்க கழுத்தறத்து எங்கூடு குடுச கொளுத்தி உசுரு போல மொத்த சனமே அழுததுண்டா.
மாடறுத்து மலமள்ளி மயானங்காத்து மோளமடிச்சு பொழைக்க வக்கத்து சுவனமில்லாமல் தவிச்சதுண்டா. தினம் தினம் பாவத்த செஞ்சுப்புட்டு சாமிக்கு மணியடிக்கிற மாதிரியிருக்கு
எல்லோரும் தமிழன்னு சொல்லும்போது.
சவுரியத்துக்கு அவனவன் சொல்லிடுறான்
தமிழன்டா.. மயிரான்டான்னு.. அப்படி என்ன தக்காளியோ தெரியல
வாய் கூசாம சொல்லிடுறானுங்க
மலக்குழி எழவுலாம் மணக்கும் போல
மிஞ்சிப்போனா என்ன சொல்லிட முடியும்
அதே தமிழன் தானே... உனக்குள்ள நீயே கேளு
யார் தமிழன்?"
"அப்படி ஒன்றும் பெரிய கோபம் வந்துவிடவில்லை
சாதாரண நிகழ்வுதான்
சரளமாக பெண்குறியைச் சொல்லிவிட்டு
கடந்து போகிறேன்
கோபம் வந்துவிட்டால் பெண்குறிகளைப் பற்றியோ ஏதேனும் பெண் நடத்தைகளைப் பற்றியோ அந்தப் பெண்களோடு உறவு வைத்துக்கொள்வது பற்றியோ காற்றடிக்கும் போக்கில் சொல்லி விடலாமென காலங்காலமாக மன வேரூன்றி இருக்கிறது.
பெண்கள் தினமதில் மட்டும் தாயாய் தங்கையாய் தோழியாய் மனைவியாய் மகளாய் வாழ்த்தி விட்டு
பொட்ட.. பெண்குறி.. என யாரையோ எதற்கோ சொல்லிவிட்டுக் கடந்தும் போகலாம்"

கவிஞர் இளையவன் சிவா

"மானமிகு தூணிலும் துரும்பிலும் வெங்காய வெளக்கு மாத்திலும் இருக்கும் பல பெயர் கடவுளே
நாளும் உன்னை வணங்கி வேண்டித் தொழுது
அழுது பிரார்த்தனை செய்து உன் துதிபாடி
உன் சொம்புகளை கழுவி வைத்து
உன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தால்
என் வாழ்வை எப்படித்தான் நான் வாழ்ந்து சாவது"

"காமத்தில் ஒருநாள் கிழித்து ஒரு கவிதை எழுதுகிறேன் ஒவ்வொரு சொல்லும் நம் பருவத்தின் திருவிழாக்கள்"

"எவ்வளவு காலத்துக்குத்தான் என் குரலில் பேசுவது
இனி உன் குரலில் பேசுகிறேன்."

"என் கண்ணீரை
என் கையால் துடைப்பதில் என்ன இருக்கிறது."

அரசியல் உணர்வுகளை பகடி செய்யும் துணிச்சல், தத்துவத்தில் திளைத்து வாழ்வைப் பாடும் அறிவு, தனிமனித ஒழுக்கம், அநியாயம் கண்டு பொங்கும் ரௌத்திரம், காதலின் தேசத்தில் தன்னையே முற்றிலும் கரைத்துவிட்டு அவள் குரலில் பேசத் துடிக்கும் ஆர்வம், தேசத்தின் போக்கு பற்றி யாரும் சிந்திக்க மறுப்பது போன்ற அமைதியின் மீதான கவலை, இருப்பதோ இல்லையோ ஏதும் செய்யாமல் காலம் கடத்தும் கடவுளின் மீதான கேள்விகள், காலத்துக்கும் கண்ணாமூச்சி ஆடிக்கொண்டு மனிதர்களை அலையவிடும் கடவுள் மீதான நையாண்டி, சாதியின் மீதான நிலைப்பாடு, வட இந்தியர்கள் மீதான நமது நிலைப்பாடு, சமுதாய ஏற்றத்தாழ்வு மீது கொண்ட சினம், கடவுளுக்காக சாகும் கூட்டத்தைப் பார்த்து வேதனைப்படும் மனம், கட்டிடங்கள் உயர்ந்தால் மட்டும் போதுமா மனிதனின் மனம் உயர வேண்டாமா என்ற கேள்வியில் தவிக்கும் போக்கு, சாதிக்கு எதிரான சமூக விடுதலைக்கான

## வாசிப்பு அனுபவம்

பயணத்தில் கேடுகெட்டத்தனங்களை நோக்கி வரிகளில் சாட்டை வீசும் சினம், அரச பயங்கரவாதம், அடக்குமுறை போன்றவற்றுக்கு எதிராக எழும் வரிகள், பெண் உறுப்புகளைச் சொல்லி திட்டும் காலங்காலமாக இருக்கும் இந்த போக்கில் பெண்கள் தினத்தில் மட்டும் தேவதை சாமி என்று வாழ்த்திவிட்டு மற்ற நாட்களில் அவர்களை அடிமைப்படுத்தும் கேவலத்தை சாடும் அவலம் என கவிதை வரிகளை வாசிக்கையில் வாசிக்கும் நமக்கு உடல் நடுங்குகிறது.

இசையின் ஸ்பரிசங்கள் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் பேரமைதியை ஏற்படுத்தி அவனது மன அழுத்தங்களையும் அதிகார வக்கிரங்களையும் இல்லாமல் செய்யக்கூடிய ஆற்றலைப் பெற்றவை. இளையராஜாவின் இசையோ கவிஞரை எப்போதுமே உடனிருந்து காப்பாற்றிக் கொண்டே இருக்கிறது. அந்த இசையின் தாக்கத்தை நூலின் கவிதைகளும் நமக்குள் ராகம் என பொழிந்து விடுகின்றன.


வாழ்தலின் இயலாமையையும் வாழ்தலின் மீதான ஆற்றாமையையும் வாழ்ந்தே தீர வேண்டிய அவசியத்தையும் தொகுப்பின் வரிகள் வெளிப்படுத்தி விடுகின்றன. கவிதையின் எல்லா சொற்களிலும் கவிஞரின் உள்ள கிடக்கை ஒளிந்துகொண்டு அவரை இயக்கியிருக்கிறது. வெறுமனே தமிழன் தமிழன் என்று கூக்குரலிடுவதால் எந்த விதமான மாற்றங்களும் நிகழ்ந்து விடப் போவதில்லை. இன்னும் சாதி ரீதியான ஒடுக்கு முறைகளும் குலத்தொழிலை செய்வது போன்று மனிதர்களை நடத்தும் விதமும் சமூக ஏற்றத்தாழ்வுகளை தொடர்ச்சியாக நிலை நிறுத்தி வைப்பதில் அரசியல்வாதிகளும் ஆணவக்காரர்களும் செயல்படும் போக்கும் மாறாதவரை கோபத்தின் வரிகள் எரிந்து கொண்டே இருக்கும் என்பதற்கு இத்தொகுப்பு நல்லதொரு உதாரணம்.

கவிஞர் இளையவன் சிவா

கட்டுரை

அறிமுகம்

மயிலை சிவ. முத்து 1892ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15ஆம் நாள் சென்னை மயிலாப்பூரில் வாழ்ந்த சிவானந்தர் - விசாலாட்சி இணையருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார்.



இவர் மயிலாப்பூரில் ஏழாம் வகுப்பு வரை பயின்றார். குடும்பச் சூழ்நிலை காரணமாக அக்கல்வி தடைபட்டது. பின்னர் 1904 ஆம் ஆண்டில் எழுப்பூரில் உள்ள சென்னை கைவினைக் கல்லூரியில் (தற்பொழுது கவின்கலைக் கல்லூரி, சென்னை) ஓவியம் கற்றச் சென்றார். தந்தையின் மறைவின் காரணமாக அக்கல்வியும் தடைபட்டது. சென்னை உயர் நீதிமன்ற அச்சகத்தில் அச்சுக் கோக்கும் பணியில் சேர்ந்தார். ஒழிந்த நேரத்தில் சிறு சிறு நூல்களைப் படித்துத் தன்னுடைய தமிழ் அறிவையும் ஆங்கில அறிவையும் வளர்த்துக்கொண்டார்.

படைப்புகள் :

- என் இளமைப் பருவம்
- தமிழ்த் திருமண முறை
- சிவஞானம்; மாணவர் மன்றம், சென்னை.
- தங்கநாணயம்; மாணவர் மன்றம், சென்னை.
- தமிழ்நெறிக்காவலர்; மாணவர் மன்றம், சென்னை.
- திருக்குறள் — எளிய உரை
- நல்ல எறும்பு; மாணவர் மன்றம், சென்னை.
- நித்திலக்கட்டுரைகள்; மாணவர் மன்றம், சென்னை.
- நித்தில வாசகம்
- முத்துக்கட்டுரைகள்; மாணவர் மன்றம், சென்னை.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

- முத்துக்கட்டுரைகள்; மாணவர் மன்றம், சென்னை.
- முத்துப்பாடல்கள் (இந்திய ஒன்றிய அரசின் பரிசைப் பெற்றது)
- வரதன்; மாணவர் மன்றம், சென்னை.

## தமிழ் மற்றும் சமுதாயப் பணி

இவர் இசைப் பாடகராக இருந்ததால் சென்னை சிவனடியார் திருக்கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார். அக்கூட்டத்தால் நிறுவப்பட்ட பால சைவ சபையில் சொற்பொழிவாற்றப் பழகினார். அங்கே தமிழறிஞர்களான ஆதிமூலம், மணி.திருநாவுக்கரசர் ஆகியவர்களின் நட்பைப் பெற்றார்.




திருநாவுக்கரசரிடம் தமிழ் பயின்று புலவர் தேர்வில் வெற்றி பெற்றார். இதனால் உயர் நீதிமன்ற அச்சகப் பணியிலிருந்து 1912ஆம் ஆண்டில் விலகினார். 1912-14ஆம் ஆண்டுகளில் ஆசிரியர் பயிற்சி பெற்றார்.

1931ஆம் ஆண்டில் மருத்துவர் தருமாம்பாள் தலைமையில் உருவாக்கப்பட்ட மாணவர் மன்றப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

1938ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் ஈடுபட்ட தொண்டர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தார்.

மருத்துவர் தருமாம்பாள் தலைவராக இருந்த தாய்மார்கள் கழகத்தில் திருக்குறள் தொடர் வகுப்புகளை நடத்தினார்.

1957ஆம் ஆண்டில் மருத்துவர் தருமாம்பாள் மறைவுக்குப் பிறகு மயிலை சிவ. முத்து மாணவர் மன்றத்தின் தலைவர் ஆனார். அப்பொழுது, நாளடைவில் சென்னையில் வாழ்ந்த மாணவர்களிடையே கலை நலமும், கல்வி வளமும் பெருகக் கலைப்போட்டிகளை நடத்தினார். உயர்நிலைப் பள்ளி முதல் கல்லூரி வரை பயின்ற மாணவர்களுக்கு முன் மாதிரித் தமிழ்த் தேர்வுகளை மாநில அளவில் நடத்தினார்.

1961ஆம் ஆண்டில் மாணவர் மன்றத்தின் சார்பில் நித்திலக்குவியல் என்னும் இதழைத் தொடங்கினார். அவ்விதழின் ஆசிரியராக இருந்தார். மாணவர் மன்றத்திற்கென சொந்தக் கட்டிடம் கட்டினார். அம்மன்றத்தின் சார்பில் 1963ஆம் ஆண்டில் தொடக்கப்பள்ளி ஒன்றைத் தொடங்கி நடத்தினார்.

**மறைவு :**

எண்ணற்ற இலக்கியம் படைத்த இலக்கியச் செம்மல்,1968 — சூலை 6ஆம் நாள் சென்னையில் இயற்கை எய்தினார்.

**நன்றி**

https://mutiru-tamilpani.blogspot.com/
https://www.annacentenarylibrary.org/


அகர முதல இலக்கியப் பேரவை
நாளை
நமதே
எதிலும் வாழ பழகிக்கொள்
அப்போதுதான்
எதையும் தாங்கும்
இதயம் வரும்.
அகர முதல இலக்கிய பேரவை
Aagaramuthalaa
www.aagaramuthala.com
aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :
9597887847
8870884969




## அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com